PRAYER 316

# எப்படி ஜெபம் செய்வது?

**தேவனிடம் எப்படிப் பேசுவது?** ஜெபிப்பது என்பது தேவனிடம் பேசுவதாகும். வேதாகமம் என்பது தேவன் நம்மிடம் பேசுவதாகும். ஜெபத்தைக் குறித்து வேதாகமம் நமக்கு என்ன போதிக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள். *"அவர் [இயேசு] ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம் பண்ணப் போதித்ததுபோல நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்."* லூக்கா 11:1. நீங்களும் அதே ஜெபத்தைச் செய்யுங்கள். ஜெபத்தைப் பற்றிய வேதாகமத்தின் போதனையில் துதி, நன்றி செலுத்துதல், பாவ அறிக்கை மற்றும் விண்ணப்பங்களைப் படைத்தல் ஆகியவை அடங்கும். துதி தேவனை உயர்த்துகிறது, கனப்படுத்துகிறது மற்றும் மகிமைப்படுத்துகிறது, சங்கீதம் 34:1-3. *"அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்,"* எபிரெயர் 13:15. அவர் செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்தப்படுகிறது. *"கர்த்தரைத் துதிப்பதும்....நலமாயிருக்கும்,"* சங்கீதம் 92:1. நமது பாவத்தின் காரணமாக பாவ அறிக்கை செய்யப்படுகிறது. *"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்,"* 1 யோவான் 1:9. உங்கள் விண்ணப்பங்களை தேவனிடம் சமர்ப்பியுங்கள், ஏனென்றால் அவரிடம் கேட்கும்படி அவர் உங்களை அழைக்கிறார். *"எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்."* பிலிப்பியர் 4:6. உங்கள் ஆவிக்குரிய மற்றும் சரீரத் தேவைகளை தேவன் பூர்த்தி செய்வதற்கான வேண்டுதல்கள் மத்தேயு 6:9-13-ல் உள்ள பரமண்டல ஜெபத்தில் உள்ளன. ஜெபம் என்பது நீங்கள் ஜீவனுள்ள தேவனுடன் பேசுவதற்கான விசேஷித்த பாக்கியமும் நல்வாய்ப்பும் ஆகும். *"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது,"* சங்கீதம் 34:15. *"பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான்,"* சங்கீதம் 32:6.

**எங்கே ஜெபிக்க வேண்டும்?** சமயக் கூடங்களிலும் கூட்டங்களிலும் ஜெபிப்பது நல்லது. இருப்பினும், இயேசு, *"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்,"* யோவான் 4:24 என்று கூறினார். வெற்றிகரமான ஜெபம் என்பது உங்கள் இருப்பிடத்தைச் சார்ந்தது அல்ல. இயேசு, *"நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்கவேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம்பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்,"* மத்தேயு 6:5-6 என்றார். வெற்றிகரமான ஜெபம் நீங்கள் எங்கே ஜெபிக்கிறீர்கள் என்பதைச் சார்ந்தது அல்ல. அது உங்கள் இருதயத்தின் நிலையைப் பொறுத்தது. வெளியரங்கமாகவும் ஜெபியுங்கள். அந்தரங்கமாகவும் ஜெபியுங்கள்.

**முழங்காற்படியிட்டு ஜெபிக்க வேண்டுமா?** இயேசுவும் பவுலும் தானியேலும் அவ்வாறு செய்தனர், லூக்கா 22:41, அப்போஸ்தலர் 20:36, மற்றும் தானியேல் 6:10. முழங்காலில் நின்று ஜெபியுங்கள். இருப்பினும், வேதாகமத்தில் உள்ள மற்றும் பிறர் நின்றுகொண்டோ, வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டோ, கைகளை நீட்டியோ அல்லது மேலே உயர்த்தியோ, தரையில் பணிந்தோ, சுவரை நோக்கியோ இருந்து ஜெபித்தார்கள். ஜெபத்தில் உங்கள் உடலின் நிலை, உங்கள் இருதயத்தின் நிலையை வெளிப்படுத்துவதாலேயே அது அர்த்தமுள்ளதாகிறது.

**எப்படி ஜெபிக்க வேண்டும்?** ஜெபத்தில் "எப்படி" என்பது, "எதை" என்பதைப் போல அல்லது அதை விடவும் முக்கியமானது. வேதாகம ஜெபம் என்பது தேவனிடம் உங்கள் இருதயத்தை வெளிப்படையாகவும் உண்மையாகவும் ஊற்றுவதாகும். நீங்கள் அவரிடம் கேட்பதை தேவன் உங்களுக்குக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தி ஜெபிப்பதற்கோ அல்லது சொல்வதற்கோ சிறப்பான வார்த்தைகளோ சொற்றொடர்களோ அல்லது வாக்கியங்களின் சேர்க்கைகளோ எதுவும் இல்லை. வேதாகமத்தின் அறிவுறுத்தல்களும் எடுத்துக்காட்டுகளும் பின்வருமாறு ஜெபிப்பதை உள்ளடக்கியுள்ளன:

நன்றியுள்ள இருதயத்தோடு, 1 தெசலோனிக்கேயர் 5:18.
மனப்பாடமாக அல்லாமல், உண்மையோடு, ஏசாயா 29:13.
அர்த்தமில்லாமல் ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லாமல், மத்தேயு 6:7.
வெளிப்படையாக, நேரடியாக, நேர்மையாக, ஏசாயா 37:14-17.
பக்தியுடன், வருந்தி, கொலோசெயர் 4:2, லூக்கா 11:5-10, 18:1-8.
தொடர்ச்சியாக, இடைவிடாமல், 1 தெசலோனிக்கேயர் 5:17.
போராடி, ரோமர் 15:30.
மற்ற விசுவாசிகளுடன் ஐக்கியப்பட்டு, மத்தேயு 18:19-20, 1 தீமோத்தேயு 2:8.
மிகுந்த விசுவாசத்தோடே, யாக்கோபு 1:6-7, எபிரெயர் 11:6.
தேவனுடைய சித்தத்தின்படி, யோவான் 15:7, 1 யோவான் 5:14-15.
இயேசுவின் நாமத்தினாலே, அவருடைய சித்தத்தின்படி அவருடைய பிரதிநிதியாக, யோவான் 14:13, 15:16.

**எதற்கென ஜெபிக்க வேண்டும்?** கர்த்தருடைய ஜெபத்தில், இயேசு தம் சீஷர்களுக்கு, அவர்களுடைய அன்றாட சரீர மற்றும் ஆவிக்குரிய தேவைகளுக்காக ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார். யோவான் 17-ல் உள்ள அவரது ஜெபத்தில், இயேசு தமக்காகவும், தம் சீஷர்களுக்காகவும், உலகத்திற்காகவும் ஜெபித்தார். தம்முடைய சித்தத்திற்கு ஏற்றதாகவும், தம்முடைய நாமத்தினாலேயும் பிதாவிடம் ஏறெடுக்கப்படும் உண்மையான ஜெபத்திற்கு பதில் அளிக்கப்படும் என்று இயேசு வாக்குறுதி அளித்தார், யோவான் 15:7, 16, 16:23, 1 யோவான் 5:14-15. நீங்கள் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதற்கான மற்ற வேதாகம அறிவுரைகளும் உதாரணங்களும் பின்வருமாறு:

ஞானத்திற்காக, யாக்கோபு 1:5, 2 நாளாகமம் 1:7-12.
ஆவிக்குரிய வெற்றிக்காக, கொலோசெயர் 1:9-12.
உங்களைத் துன்புறுத்துபவர்களுக்காக, லூக்கா 6:28.
சொஸ்தம் அடைவது சாத்தியமே, யாக்கோபு 5:14-15, ஆனால் எல்லோருக்கும் அல்ல, 2 கொரிந்தியர் 12:7-9.
ஒருவருக்கொருவர், எபேசியர் 6:18, யாக்கோபு 5:16.
உங்கள் அரசாங்கத்திற்காக, 1 தீமோத்தேயு 2:1-2.
உங்கள் ஆகாரத்துக்காக, மத்தேயு 6:11, மாற்கு 6:41, 8:6-7.
கிறிஸ்து தேவைப்படுபவர்களுக்காக, ரோமர் 10:1.
சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க உழைப்பவர்களுக்காக, மத்தேயு 9:37-38.
நற்செய்திக்குக் கதவுகள் திறக்கப்பட, கொலோசெயர் 4:3-4.

**தேவன் உங்கள் ஜெபங்களைக் கேட்டு பதிலளிக்கிறார்.** ஜெபத்திற்கான தேவனுடைய நிபந்தனைகளை நிறைவேற்றுங்கள், அவர் உங்களுக்கு பதிலளிப்பார். தேவனுடைய பதில் *ஆகட்டும், தாமதமாகும்,* அல்லது *இல்லை என்பதாக இருக்கலாம்.* நீங்கள் கேட்பதை அல்லது நினைப்பதை விட அதிகமாக அவர் உங்களுக்குக் கொடுக்கலாம், எபேசியர் 3:20. தேவனுடைய தாமதம், அவருடைய பதிலுக்காக உங்களையோ மற்றவர்களையோ ஆயத்தப்படுத்துவதற்காக இருக்கலாம். அல்லது அவருடைய பதில் ஒரு முடிவான பதிலான *கிடையாது என்பதாக இருக்கலாம்.* அவர்மீது விசுவாசம் வைத்து, அவருடைய பதில்களை முழுமையாக நம்பி ஜெபியுங்கள்.

உங்கள் நோக்கங்கள் முக்கியமானவை. *"நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியில், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்,"* யாக்கோபு 4:3.

புருஷனே, உன் மனைவியை நன்றாக நடத்து. கிறிஸ்து சபையை நேசிப்பது போல, ஒரு கணவன் தன் மனைவியை நேசிக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது; *"உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு,"* 1 பேதுரு 3:7 அவளைப் பேணி, அவளைப் புரிந்துகொண்டு, கிருபையின் வாழ்விற்கு உடன் சுதந்தரராக அவளை மதிக்க வேண்டும்.

மற்றவர்களை மன்னியுங்கள். மன்னிக்காமல் இருப்பது உங்கள் ஜெபங்களைத் தடுக்கிறது. நீங்கள் மற்றவர்களை மன்னிப்பது, தேவனிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய மன்னிப்பை வெளிப்படுத்துகிறது, மாற்கு 11:25, மத்தேயு 5:23-24, 6:12-15. நீதியுள்ளவர்களாக இருங்கள்.

தேவனுக்கு முன்பாக ஆவிக்குரிய ரீதியாக சுத்தமாக இருங்கள், அப்போது உங்கள் ஜெபங்கள் மிகுந்த பலனைத் தரும். *"செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்,"* நீதிமொழிகள் 15:8. ஆனால், ஒருவன் அவருடைய பிரமாணத்தை விட்டு விலகினால், *"அவனுடைய ஜெபமும் அருவருப்பானது,"* நீதிமொழிகள் 28:9. தேவன் உங்களைப் பாதுகாத்து, ஆயத்தப்படுத்தி உங்களைப் பூரணப்படுத்துகிறார். மறுப்புகளும் தாமதங்களும் உங்கள் நன்மைக்காகவே இருக்கலாம்.

நீங்கள் கேட்பது உங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று நீங்கள் அறியாதபோது, தேவன் உங்களைப் பாதுகாக்கிறார். தேவன் உங்களைக் குறித்து உங்களை விட நன்கு அறிவார். தேவன் உங்கள் எதிர்காலத்தையும், உங்களுக்கு எது சிறந்தது என்பதையும் அறிந்திருப்பதால் சில நேரங்களில், 'இல்லை' என்று கூறுகிறார். சில நேரங்களில், அவருடைய பதிலுக்கு நீங்கள் தயாராவதற்கு நேரம் கொடுப்பதற்காகவே தாமதம் ஏற்படுகிறது. மற்றும் சில நேரங்களில், அவருடைய மறுப்புகளும் தாமதங்களும் உங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்தவே வருகின்றன. தேவனின் பதில்களை விசுவாசத்துடனும் நன்றியுடனும் ஏற்றுக்கொள்ளுங்கள். தேவன் தாம் செய்வதை அறிந்திருக்கிறார். தேவனிடம் பேசுங்கள். அவர் செவிகொடுக்கிறார். ஜெபியுங்கள்!

**"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது." 1 தெசலோனிக்கேயர் 5:18**

*எப்படி ஜெபம் செய்வது?* © 2026 ஜான் டி. மோரிஸ் III அவர்களால் எழுதப்பட்டு ஆக்ட்ஸ் ஒன் எய்ட் (Acts One Eight) நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. இந்த முழுமையான அறிக்கையுடன், உள்ளடக்கத்தை மாற்றாமல் நீங்கள் இதை அச்சிடவோ, நகலெடுக்கவோ, பதிவிடவோ, மின்னஞ்சல் அனுப்பவோ அல்லது குறுஞ்செய்தியாக அனுப்பவோ செய்யலாம். முதல் பக்கத்தின் மேலே உங்கள் ஊழியம் அல்லது திருச்சபையின் பெயர் அல்லது சின்னத்தைச் சேர்க்கலாம் மற்றும் இரண்டாம் பக்கத்தின் கீழே உள்ள கோட்டிற்கு மேலே உங்கள் தொடர்புத் தகவலைச் சேர்க்கலாம். ஜெபம் 316 வேதாகமத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இது மக்கள் ஜெபிக்கவும், தேவனுடனான தங்கள் உறவில் வளரவும் உதவுவதற்காகவே உள்ளது. நீங்கள் ஆக்ட்ஸ் ஒன் எய்ட்-ற்கு (முடிந்தால் ஆங்கிலத்தில்) *Hello@Mail316.org*. என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம். மொழிபெயர்ப்பு சேவைகள் www.ChristianLingua.com மூலம் வழங்கப்பட்டன. *எப்படி ஜெபம் செய்வது?* www.Prayer316.org. இல் 48 மொழிகளில் இலவசமாகக் கிடைக்கிறது. ஆங்கிலப் பதிப்பில் உள்ள மேற்கோள்கள் தி லாக்மேன் ஃபவுண்டேஷனின் நியூ அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் வேதாகமம் 1995-இலிருந்து எடுக்கப்பட்டவை. இந்த மொழிபெயர்ப்பில் உள்ள வேதாகம மேற்கோள்கள் பழைய தமிழ் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை.